University of Jaffna Sri Lanka
RECEIVED
Division

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஆடி: 11 முஹர்ரம் பிறை: 4 இதழ்: 158
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 27-07-1990

## 17 பொலிஸார் விடுதலை: அமைச்சர் ரஞ்சன் 'புதிர்' போடுகிறார்!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியல் தாம் சிறைபிடித்த பொலிஸாரில் ஒரு பகுதியினரை யாழ். நகரில் விடுதலை செய்துள்ளதாக விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு, யோகரட்ணம் யோகி விடுத்த அறிக்கையை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ண மறுத்துள்ளார்.

''விடுதலைப் புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்ட பொலிஸாரையும் இராணுவ வீரர்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னிலையிலேயே விடுதலை செய்ய வேண்டுமென நாம் கேட்டிருந்தோம் ஆனால் அவ்வாறு செய்யாமல் யாழ். நகரில் வைத்து ஒரு பகுதி பொலிஸாரை விடுதலை செய்துவிட்டோம் என்று திரு. யோகி விட்ட அறிக்கையை நாம் நம்புவதற்கு இல்லை'' பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர்

[4-ம் பக்கம் பார்க்க]

★ பலாலியிலிருந்து வெளியேறுவதிலும்

★ கிளிநொச்சியைச் சென்றடைவதிலும்

# அரசபடையினர் தீவிர முயற்சி!

# விடுதலைப்புலிகள் கடும் தாக்கு!

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்துக்கு வடக்கே பலாலியிலும், தெற்கே கிளிநொச்சிக் கருகிலும் விடுதலைப்புலிகளுக்கும் - அரச படையினருக்குமிடையே நேற்றுமுதல் உக்கிரமான சண்டை ஆரம்பித்துள்ளது.**

**கிளிநொச்சி முகாமைக் கைப்பற்றுவதிலும் அதேநேரத்தில் பலாலியிலிருந்து வெளியே வருவதிலும் ஸ்ரீலங்கா அரசபடையினர் முழு முயற்சி மேற்கொண்டு வந்தபோதிலும், விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலினால் படையினரின் முன்னேற்றம் (இச்செய்தி எழுதிக் கொண்டிருக்கும்வரை) தடைபட்டுள்ளது.**

பலாலி, காங்கேசன் துறை இராணுவ முகாம்களிலிருந்து கடந்த 23ம் திகதி முதல் அரசபடைகளின் தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

பலாலி முகாமிலிருந்து ஷெல் தாக்குதல், துப்பாக்கிப் பிரயோகம், 'சினைப்பர்' தாக்குதல் ஆகியன அடிக்கடி நடத்தப்படுகின்றன. காங்கேசன்துறை திஸ்ஸவிகாரை முகாமிலிருந்தும், கடற்பகுதியிலிருந்தும் பீரங்கிக் குண்டுகள் ஏராளமாக ஏவப்படுகின்றன.

இத்தாக்குதல்களினால் இடம் பெயர்ந்த மக்கள் தமது வீடுகளைப் பார்க்கச் சென்று இடைவழியில் திரும்பிவிடுகிறார்கள்.

இதுவரை இடம் பெயராமல் இருந்தவர்களும் தற்போது இடம் பெயர ஆரம்பித்துள்ளதாக கூறப்படுகிறது,

நேற்று அதிகாலையிலும்

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலை - நிலாவெளி வீதி போக்குவரத்திற்கு தடை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையிலிருந்து நிலாவெளி ஊடாக செல்லும் வீதியில் எவரையும் போக்குவரத்துச் செய்யவேண்டாமென்று இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளை உணவுப்பொருள் எதனையும் இவ்வீதியால் எடுத்துச் செல்லவேண்டாமென்றும் இராணுவத்தினர் எச்சரித்துள்ளனராம்.

இவ்வீதி தடைசெய்யப்பட்டதனால் பொதுமக்களின் போக்குவரத்துச் சேவைகள் யாவும் பாதிப்படைந்துள்ளது. (107)

## 'ஈரோஸ்' எம்.பிக்கள் ராஜினமா: ரஞ்சன்புதியகூற்று

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் வற்புறுத்தல் காரணமாகவே பாராளுமன்றப் பதவிகளை ராஜினமா செய்ததாக 'ஈரோஸ்' இயக்கத்தைச் சேர்ந்த திரு. நடராஜா, திரு.

[4-ம் பக்கம் பார்க்க]

## சுழிபுரம், தொல்புரத்தில் ஜனதிபதி உட்பட மூவரின் கொடும்பாவிகள் எரிப்பு!

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பகுதியில் ஜனதிபதி பிரேமதாசா, அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன, ராஜாங்க அமைச்சர் திருமதி பி. ராஜமனோகரி ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

மூளாயிலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட இக்கொடும்பாவிகள் சுழிபுரம் சந்தியில் வைத்துத் தகனம் செய்யப்பட்டது.

## ரஞ்சன், ஹேமா, ராஜமனோகரி இன்று வவுனியாவருகிறார்கள்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தின் இராணுவ நடவடிக்கைகளின் உண்மை நிலையை நேரில் கண்டறிவதற்கும், அங்கு அகதிகள் ஆக்கட்பட்டுள்ளசிங்கள தமிழ் மக்களைச் சந்திப்பதற்கும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன உட்பட திருமதி ஹேமா பிரேமதாசா, கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி இராஜ

(4-ம் பக்கம் பார்க்க)

## பரந்தனில் புலிகள்-ராணுவம் தொடர்ந்து கடும் சண்டை!

(யாழ்ப்பாணம்)

பரந்தன் சந்தியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இம் மோதல்களின்போது இராணுவத்தினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியை நோக்கி முன்னேறும் நோக்குடன்

(4-ம் பக்கம் பார்க்க)

## பலாலி ஷெல் தாக்குதலினால் பதுங்குகுழி வெட்டிய மூவர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் குடியிருப்புப்பகுதிகளைநோக்கி நடத்தப்பட்ட ஷெல், துப்பாக்கிப் பிரயோகங்களினால் வசாவிளான், குரும்பசிட்டி,

(4-ம் பக்கம் பார்க்க)

## 'முந்திரிக்கொட்டை'யாக மாறும் தமிழோசை!

(யாழ்ப்பாணம்)

பி. பி. ஸி. தமிழோசையில் கடந்த சில தினங்களாக, இலங்கை பற்றி வெளிவரும் செய்திகளும், ஆய்வுரைக் கண்ணோட்டமும் இலங்கைத் தமிழ்மக்கள் மீது குறிப்பாக வடபகுதித் தமிழர்கள் மத்தியில் பெரும் மனக்கசப்பை ஏற்படுத்திவருகிறது.

வடக்கில் நடைபெறும் யுத்தத்தில், உண்மைச் செய்திகளை அறிவதில் தமிழ் மக்கள் முழுக்க முழுக்க பி. பி. ஸி. தமிழோசையை நம்பியிருக்க, கடந்த சில தினங்களாக பி. பி. ஸி. செய்திகள், ஒரு பக்கச் சார்பான தகவல்களையே வெளியிட்டுவருகின்றன.

வடக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தில் இலங்கை இராணுவ வட்டாரங்களை ஆதாரமாகக்கொண்டே பி. பி. ஸி. செய்தி வெளியிட்டு வருகிறது.

''நமது கொழும்பு நிருபரின் செய்திக் கண்ணோட்டம்'' என்று கூறும் பி. பி. ஸி., இலங்கை இராணுவ உயர் அதிகாரி கொடுத்த தகவலை மட்டும் அடிப்படையாகக் கொண்டே செய்திகளைக் கூறுகிறதே தவிர, விடுதலைப் புலிகளின் அறிக்கையை உடனடியாகவெளி

[4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாம் பாராளுமன்றம் சென்று ஒரு வருடமாகியும் எமது கோரிக்கைகள் எதனையும் அரசாங்கம் நிறைவேற்றவில்லை"

## ஈரோஸ் எம். பி. பரா. ராஜினுமாக் கடிதம்!

(யாழ்ப்பாணம்)

"நாம் பாராளுமன்றம் சென்று ஒருவருடமாகியும் எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் சிங்களக் குடியேற்றம், 6-வது திருத்தம் நீக்கல், மலையக மக்களின் குடியுரிமை வழங்கல் எதையும் இந்தஅரசு நிறைவேற்றவில்லை. சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பராளுமன்றமாகவே இப்பாராளுமன்றம் செயல்படுவதனால் இதில் இனிமேலும் நான் அங்கம்வகிக்க விரும்பாமல் 1990 ஜுலை 19-ம் திகதியிலிருந்து ராஜினுமாச் செய்கின்றேன்" என்று ஈரோஸ் எம். பி. இ. பரராஜசிங்கம் தனது ராஜினுமா குறித்து பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.



அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று தமிழ்பேசும் மக்களின் உரிமைப் பிரச்சனைகளை பேசித் தீர்ப்போம் என்று ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசும் பிரேமதாசாவும், எப்படி பண்டாரநாயக்காவும், சிறிமாவோ பண்டாரநாயக்காவும், ஜெயவர்த்தனவும் சோசலிசத்தை வளர்த்து தமிழ் மக்களுக்கு எதிராக தூண்டிவிட்டார்களோ அதேபாணியைத்தான் இன்றைய ஜனதிபதியும், அவரது அமைச்சர்களும் புதிய வடிவத்தில் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

"இப்பாராளுமன்றத்தில் உள்ள ஆளும் கட்சியில் இருந்து எதிர்க்கட்சிகள் வரை யாவும், சிங்கள சோசலிசத்தை வளர்க்கிறதே தவிர தமிழ் மக்களின் குறைந்தளவாவது உரிமைகளைக்கூட கொடுக்கும் எண்ணங்கள் கூட தெரியவில்லை"

இன்று ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களுக்கெதிராக சிங்கள அரசு போர்ப் பிரகடனம் செய்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் எத்தனையோ அப்பாவித் தமிழ் மக்கள் சிங்கள இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பல தமிழ்ப் பெண்கள் மான பங்கப்படுத்தப்பட்டுள்ளனர்."

"வடபகுதியில் மட்டும் 3 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். விமானத் தாக்குதல்கள் கண்மூடித்தனமாக நடத்தப்படுகின்றன. வேறொரு நாட்டுடன் போர் செய்வது போன்று சிங்கள அரசு தமிழ் மக்கள் மீது போர் தொடுத்துள்ளது.

"வெளி நாடுகளிலும், உள்நாட்டிலும் தாம் தமிழ்மக்களைக் கொல்லவில்லை. விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளவில்லை எனப் பொய்ப் பிரசாரம் செய்து கொண்டு அதற்கு எதிர்மாறாக வடக்கு, கிழக்குப் பகுதியில் கடும் மோதல்களையும், பொருளாதாரத் தடையையும் மேற்கொண்டுள்ளது. குறிப்பாக வடபகுதியில் அத்தியாவசியப் பொருள்கள் கூட அனுப்பாது தடை செய்யப்பட்டுள்ளது.

இப்படியான நிலையில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக நாம் இருந்துகொண்டு இதே மக்களின் படுகொலைகளையும், சிங்கள இனவாதத்தின் கொடுமைகளையும் இந்த பாராளுமன்றம் கண்டிக்காமல், அதைத் தடுத்துநிறுத்தாமல் மாறாக, சிங்கள இனவாத அமைச்சர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாய்க்குவந்த விதத்தில் பேச்சுக்களை மேற்கொள்வதைப்பார்க்கும்போது இப்பாராளுமன்றமானது சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்றமாகவே தென்படுகிறது."

## கைதான இளைஞன் கிணற்றிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

செட்டிகுளத்தில் கடந்த 17ம் திகதி இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட மதுரை நாகேந்திரம் (வயது 22) என்ற இளைஞன் நேற்று முன்தினம் செட்டிகுளம் பொதுக்கிணற்றிலிருந்து சடலமாக பொதுமக்களால் மீட்கப்பட்டார். (வி)

## சுழற்சிமுறை மின்சாரம் இல்லை

(மானிப்பாய்)

நவாலி பகுதிக்கு கடந்த மூன்று நாட்களாக ஒருமணி நேர சுழற்சிமுறை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இதனால் இங்குள்ள அரிசி ஆலைகளில் பலரும் மிளகாய், அரிசிமா மற்றும் பல பொருட்களை திரிப்பதற்கு காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். குழாய்க் கிணறுகளை நம்பி வாழ்ந்த பலர் நீர் எடுப்பதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர்.

இவ்விஷயத்தில் மின்சாரப் பகுதியினர் ஏனைய பகுதிகளுக்கு வழங்குவது போல் இப்பகுதிக்கும் சுழற்சிமுறை மின்சாரத்தை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள்.

## 10 லட்சம் பேர் வேலையிழப்பர்

(சென்னை)

உலகிலே பெரிய கம்யூட்டர் மையம் இந்தியாவிலே உருவாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கத்துக்கும் மாநிலங்களுக்குமிடையில் நிர்வாகப்பணிகள் துரிதமாக நடைபெற வசதியேற்பட்டுள்ளது. சகல வர்த்தக நிறுவனங்களும் தொழிற்சாலைகளும் இந்தியாவில் எண்பது சத விகிதம் கம்பியூட்டர் மயப் படுத்தப்பட்டுள்ளது. இதனால் அடுத்த ஆண்டு இந்தியாவில் 10 லட்சம் சுருக்கெழுத்தாளர்கள் வேலைவாய்ப்பை இழந்துவிடுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## லொறி மீது 'ஹெலி' சூடு!

(மானிப்பாய்)

கொழும்புத்துறையில் வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்த லொறிமீது ஹெலியிலிருந்து பல தடவை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தெய்வாதீனமாக லொறிக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை. (71)

# மாணவர் அமைப்பு நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டம்!

(நாவற்குழி)

இனவாத சிறிலங்கா அரசினால் காரணமின்றி கைதுசெய்யப்பட்டும், சுடப்பட்டும், வெட்டப்பட்டும் கொலைசெய்யப்படுகின்ற தமிழ் மக்களினதும், தமிழ் இளைஞர்களினதும் கொலைகளைக் கண்டித்தும், ஆட்சேபித்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சி மாணவர் அமைப்பு மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியது.

தென்மராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. ரஞ்சன் தலைமையில் கொடிகாமம் மாவீரர் நினைவாலயத்திற்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தஆர்ப்பாட்டஊர்வலம் கண்டிவீதி வழியாகச்சாவகச்சேரிச் சந்தை மைதானம் வரை நடைபெற்றது.

தென்மராட்சியில் இருந்தும் பச்சிலைப்பள்ளியில் இருந்தும் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்களும், மாணவ மாணவியரும் சீருடையில் கலந்துகொண்டு பரீட்சையை ஒத்திவை அல்லது பகிஷ்கரிப்போம் எனக் கோஷமிட்டவாறு வீராப்புடன் அணியணியாக ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

"மாணவர் சக்தி
மாபெரும் சக்தி
மாற்றானுக்கு திறப்பா
புத்தி"

"அடிமை விலங்கை
உடைந்தெறிவோம்
அன்னைத் தமிழைக்
காத்திடுவோம்"

என்பனபோன்ற நூற்றிஐம்பதிற்கும் மேற்பட்ட 'சுலோகங்கள்' தாங்கியவண்ணமும் கோஷங்களை எழுப்பியவண்ணமும், கொதிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது மாணவர் அணி பார்ப்போர் மனதை உருகவைக்கும் விதத்தில் நடைபெற்றது. ஊர்வல இறுதியில் சந்தை மைதானத்தில் திரு. ரஞ்சன்தலைமையில் மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. (107)

# தாக்குதலுக்கு அஞ்சி பதுங்குகுழிக்குள்சென்றவர் நாய் கடித்து காயம்!

[மட்டுவில்]

'ஹெலி' தாக்குதலுக்கு அஞ்சி, சாவகச்சேரி சந்தைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பொதுப் பதுங்கு குழி ஒன்றினுள் தஞ்சம் புகுந்துகொண்ட பெண் ஒருவரை அதனுள் குட்டிபோட்டுப் பாதுகாத்துக் கொண்டிருந்த நாய் ஒன்று கடித்துக் காயப்படுத்தியுள்ளது.

காயமடைந்தவர் அப்பதுங்குகுழியிலிருந்து வெளியேறி வேறு ஒரு பதுங்குகுழிக்குள் தஞ்சமடைந்தார். (82)

## பெரிய புராண தொடர்'சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்கந்தப்பெருமானின் உற்சவகால 25 நாட்களிலும் நல்லை ஆதீனத்தில் பிற்பகல் மூன்று மணிக்கு 'வேதாந்த சாகரம்' ஆத்மஜோதி திரு. நா. முத்தையா சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

ஆதீனத்தில் தினமும் பிற்பகல் 4-30 மணிக்கு மக்களுக்கு அமைதியும் சுபீட்சவும் வேண்டி பஜனைகள் நடைபெறுகின்றன.

## பயிலுநர் சங்க கூட்டம்

(யாழ்பபாணம்)

தீவுப்பகுதி பயிலுநர் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் இம் மாதம் -28ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அகதிகளாகஇடம்பெயர்ந்த மக்களுக்கு உடை, உணவு வழங்கி உதவுதல், ஆசிரியர்களுக்கான அடையாள அட்டை வழங்குதல் போன்ற பிரதான விடயங்கள் பற்றி இக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

## இராசி பலன்

27-07-90
வெள்ளிக்கிழமை

பஞ்சமி காலை 6-32 வரை, உத்தரம் காலை 6-52 வரை, சித்தாஅமிர்தயோகம், ஷஷ்டி விரதம், ராகு காலம் 10-32 முதல் 12-02 வரை, நல்ல நேரம் காலை 6-02 முதல் 7-02 வரை.

**மேடம்:** அறிஞர் சந்திப்பு, தொழில்வெற்றி, காரிய வெற்றி, அவசரபுத்தி.

**இடபம்:** அதிகயோசனை, பணக்கஷ்டம், காரிய தாமதம், குடும்பத்தில் ரோகம்.

**மிதுனம்:** ஏமாற்றம், தொழில் பாதிப்பு, கடன் பிணக்கு, அந்நியவாசம்.

**கடகம்:** மனநிறைவு, புதிய முயற்சி, அரச உதவி, தொழில் பாராட்டு.

**சிங்கம்;** உறவினர் தொல்லை, பணக்கஷ்டம், அலைச்சல்.

**கன்னி:** பணியாள் சகாயம், குடும்பத்தில் மகிழ்ச்சி, மக்களால் பாராட்டு.

**துலாம்:** குடும்பப் பிரிவு, தொழில் கஷ்டம், எதிர்பாராத செலவு, வீண் யோசனை.

**விருச்சிகம்:** கடிதத்தொடர்பு, நல்லோர் சினேகம், சுப காரியம், காரிய வெற்றி.

**தனுசு:** கருத்து வேற்றுமை, வைத்தியச் செலவு, நண்பர் பகை, பணமூலமான கவலை.

**மகரம்:** பயணங்களால் அலைச்சல், குடும்பமனத்தாபம், தொழில் பிணக்கு, அசதி.

**கும்பம்:** ஏமாற்றம், விரக்தி நிலை, பணமின்மை, வீண் விரோதம்.

**மீனம்:** கடன் வரவு, தனகாரிய நிறைவு, உறவினர் உதவி, குடும்ப மகிழ்ச்சி.

-ஜோஸ்யர்

## கடுகுக் கதைகள் - 3
## சீனிப் பற்றுக்குறை

*1958... 1977... 1983*

பிரபல சரக்கு வியாபாரியார் கு. ம. கு. பிள்ளை அவர்களின் வாழ்க்கையிலே மறக்க முடியாத ஆண்டுகள்!

லட்சாதிபதியான அவரின் கடைகள் தரைமட்டமாகி அவரைப் பிட்சாதிபதியாக ஆக்கிய ஆண்டுகள் அவை.

ஆனால் அவர் வீழ்ந்து விடவில்லை! ஆலம் வித்தை ஆல விருட்சமாக வளர்த்தெடுக்கும் வியாபாரதந்திரம் அவரைக் கைதூக்கிவிடத் தவறவில்லை.

ஏகாக்கிரசித்தத்துடன் பருவம் நோக்கிக் காத்திருந்து பண்டப்பதுக்கல் செய்து காற்றுள்ளபோதே தூற்றி... இந்தத் திறமை அவரது இரத்தத்தோடு ஊறியது!

1990 யூலை மாதத்திலும் இதே உத்தியைத்தான் அவர் கையாண்டார்!

சீனி... மா... அரிசி... உழுந்து... பயறு என்றுபதுக்கி வைத்தால்...

ஒன்று பத்தாகி... நூறாகி... ஆயிரமாகி... லட்சமாகி... வங்கிகளிலே அவரின் கணக்கில் இலக்கங்கள் இலட்சங்களாயின!

இப்பொழுது 'கு. ம. கு. பிள்ளை அன்ட் சன்சில்' விற்பனைக்கு எதுவுமே இல்லை!

இனி வீட்டிலே பிள்ளை குட்டிகளோடு தாமுண்டு பதுங்குகுழி உண்டு என்ற நிம்மதியில் வாழலாம் என்று அவர் நினைத்தபொழுது...

பாவம்!

அவருக்கு நீரிழிவு வியாதி. இனிப்புப் பண்டங்களை ஒதுக்கி நேரத்துக்கு நேரம் குளிசைகளோடும் இன்சுலின் ஊசி மருந்தோடும் குரக்கன் வரகு பச்சிலைகளோடும் வாழ்ந்து வந்த அவருக்கு லேசான தலைச்சுற்றலிலே தொடங்கிக்கைகால் நடுக்கம், பலவீனம் ஏற்படவே அவர் மகன் அவரைப் பிரபல டாக்டரிடம் அழைத்துச் செல்ல நேர்ந்தது.

டாக்டர் பணக்கார நோயாளிக்குச் செய்யவேண்டிய உடற்கூற்றுப்பரீட்சை அத்தனையையும் செய்து முடிவில் சொன்னார். "முதலாளி! உங்கள் உடம்பிலை சீனிச்சத்துக் குறைவாயிருக்குது. கொஞ்ச நாளைக்குக் கூடுதலாய்ச் சீனி சேர்த்துக் கொள்ளுங்கோ எல்லாம் சரியாய் விடும்."

ஆனால்...

கட்டிய மனைவி, பெற்ற பிள்ளைகளுக்கே போக்குக் காட்டிச் சீனிப்பதுக்கலை முற்றாகக் கடைப்பிடித்து, கிலோ ஐம்பது, அறுபது ரூபாவுக்கு விற்றுப் பணத்தை எண்ணிய அவர் வீட்டிலே, காக்கிலோ சீனி கூட இல்லை. கடைசிப் பனங்கட்டிக்குட்டானும் காலையிலேதான் முடிவு கட்டத்தை அடைந்திருந்தது.

'என்ன செய்யலாம்' தகப்பனும் மகனும் விழிபிதுங்க யோசித்தார்கள்.

கு. ம. கு. பிள்ளையவர்கள், பிரபல பலசரக்கு வியாபாரியார் தமது காரிலே மகனோடு கடைத் தெருவெல்லாம் அலைந்து கிலோ அறுபத்தைந்து ரூபா விலைக்கு ஒரு கிலோ சீனி வாங்கிக் கொண்டு வீடு திரும்பினர்.

- சிவராணி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் தாருங்கள்

(யாழ்ப்பாணம் முத்திரை சந்தையிலுள்ள யாழ். இந்து சென். ஜோன் முதலுதவிப் படையின் தகவல் மையத்தில் பெறப்பட்ட விபரங்கள் இவை)

மட்டக்களப்பை சேர்ந்த ஆசிரியை திருமதி பி. கோபாலரையும் மகனையும் காங்கேசன்துறை கருகம்பனை கே. சிற்சபேசன் தேடுகிறார்.

மட்டக்களப்பு 89, லேடி மன்னிங் றைவ்வை சேர்ந்த வி. இராமநாதனை யாழ். கந்தர்மடம், 22. மணல்தறை ஒழுங்கையைச் சேர்ந்த அரசரத்தினம் சுரேஷ் தேடுகிறார்,

அக்கரைப்பற்று பிரிவு இலக்கம் ஏழைச்சேர்ந்த அதிபர் மஞகப்பொடியார் லோகநகதன் ஆசிரியை திருமதி வேருமனோகரி லோகநாதன் ஆகியோரை, கொக்குவில் மேற்கு கே. கே. எஸ். வீதி 3வது மைல் கல்லடியை சேர்ந்த திருமதி ஏ. இரட்ணசிங்கம் தேடுகிறார்.

திருகோணமலை சாம்பல் தீவு புதுக்குடியிருப்பு வரோதய நகரை சேர்ந்த தங்கவேல் மலர்விழி கர்ணன் லோகேஸ் ஆகியோரை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியைச் சேர்ந்த ப. இராமச்சந்திரன் தேடுகிறார்.

திருகோணமலை 98, பத்மா வீதியைச் சேர்ந்த வி. இராமலிங்கத்தை கோப்பாய் வடக்கு இ. இ பாடசாலையைச் சேர்ந்த செல்லத்துரை (மே/பா ஆ. பத்மசேகர்) தேடுகிறார்.

திருமலை 310/1, என். சி. றோட்டைச் சேர்ந்த டொன் சிறில் வாஷிங்டனை நீர்வேலி வடக்கைச்சேர்ந்த அரசடிப் பிள்ளையார் கோவிலடி டி. நேசன் தேடுகிறார்.

கல்முனை ஆஸ்பத்திரி ஒழுங்கையைச் சேர்ந்த ஆசிரியர் அருளானந்தன் அருமைமகளை திருநெல்வேலி 3, இராமநாதன் வீதியைச் சேர்ந்த ஏ. சதானந்தன் தேடுகிறார்.

திருகோணமலை ஸ்ரீலங்கா துறைமுக அதிகார சபையைச் சேர்ந்த இராசையா ஜெகநாதனை கொக்குவில் கே. கே. எஸ். வீதி 3-ம் கட்டையைச் சேர்ந்த திருமதி ப. ஜெயநாதன் தேடுகிறார்.

வாழைச்சேனையை சேர்ந்த பொன்னுத்தம்பி தியாகராசாவை நல்லூர் கோவில் வீதியை சேர்ந்த ரி. ரேணுகாதேவி தேடுகிறார்.

திருமலை 156 மத்திய வீதியை சேர்ந்த வே. கணபதி திருமலை 158 மத்திய வீதியை சேர்ந்த சி. ஜீவானந்தம் திருமலை 160/2 மத்திய வீதியை சேர்ந்த வி. சின்னராசா திருமலை 47, கந்தசாமி கோவில் வீதிய்ய சேர்ந்த இ. ரமேஷ் ஆகியோரை யாழ்ப்பாணம் 3, வெங்கடேச வீதியை சேர்ந்த நா. மகேந்திரன் தேடுகிறார்.

திருகோணமலை தபாற்கந்தோரை சேர்ந்த இ. சிவபாதசுந்தரத்தை அளவெட்டி வடக்கு செ. குமாரையா தேடுகிறார்.

திருமலை கிளிவெட்டி கட்டட ஒப்பந்தகாரர் ஜெயவீரசிங்கத்தை யாழ் இந்துக்கல்லூரியை சேர்ந்த கே. எஸ். தீபன் தேடுகிறார்.

## வினைகளை ஓட்ட விரைந்திடு முருகா!

வெற்றிவேல் கொண்டு வினைகளை ஓட்ட
விரைந்திடு நல்லூர் முருகா;
பற்றியே நின்று உன்கழல் தொட்டுப்
பாடினேன்; எங்களின் துன்பம்
உற்றுநீ பார்த்து உதவிடுக; கந்தா!
உன்கொடி ஏறட்டும் இன்று;
மற்றுமுன் வரத்தால் மலர்ந்திடும் ஈழ(ம்)
மணிக்கொடி ஏறட்டும் நன்றே!

- முருகனடியான்

(27-07-1990 இன்று நல்லூர் கொடியேற்றம்)

### பல்கலைக்கழக மாணவருக்கான
## முன்னோடி ஆங்கில வகுப்பு
### மருதனமடத்தில் நடைபெறும்

(காங்கேசன்துறை)

பல்கலைக்கழகத்திற்குதெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கான முன்னோடி ஆங்கில வகுப்புகள்மருதனமடம்இராமநாதன் கல்லூரியில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி வடக்குப் பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆங்கிலவகுப்பு நடைபெற்று வந்தது. தற்சமய சூழ்நிலையால் இவ்வகுப்புகள் ஸ்தம்பிக்க நேர்ந்தது. இதனையடுத்துமருதனடம்இராமநாதன் கல்லூரியில் வகுப்பு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி மாணவர்களை அங்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (86)

### மருதனமடம்
## கல்விக்கோட்ட ஆசிரியருக்கு சம்பள முற்பணம்

(காங்கேசன்துறை)

மருதனமடம் கல்விக்கோட்டத்தில் கடமை புரியும் சகல ஆசிரியர்களுக்கும் 1000 ரூபா சம்பள முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆசிரியர்களுக்கான சம்பள விபரப்பட்டியல்கள் யாவும் தயாரிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளதாகவும் சம்பளப்பணம் கிடைத்ததும் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மருதனமடம் கல்விக்கோட்ட அலுவலகம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரனின் மேற்பார்வையில் ஸ்தம்பிதமாகாமல் செயல்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (86)

### "சனசமூகநிலையங்கள்
## மக்களுக்கு முதலுதவிபயிற்சி வழங்க உதவ வேண்டும்"

(பண்டத்தரிப்பு)

"போர்க்கால சூழ்நிழ்நிலையில் சன சமூக நிலையங்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு முதலுதவிப் பயிற்சியை வழங்கி அநியாய உயிரிழப்புகளிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியம்" என்று சில்லாலை நல்லாயன் சன சமூக நிலையத்தினல் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால குறிப்பிட்டார்.

சில்லாலை கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சில்லாலை பகுதியிலுள்ள ஐந்து சன சமூக நிலையங்களின் பிரதிநிதிகளும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜப்பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

திரு. வ. மரியதாஸ்தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. டிவகலால தொடர்ந்து உரையாற்றுகையில் "சிறுதானிய உணவு உற்பத்தியை ஊக்குவிக்க சன சமூக நிலையங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்றும் பிரச்னை நடக்கும் இடங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு சகோதர மனப்பான்மையுடன் மனப்பூர்வமாக தொண்டாற்ற வேண்டியது இக்கால கட்டத்தில் மிகவும் அவசியமானது" என்றும் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் முதலுதவிச் சிகிச்சை பற்றி சென். ஜோன் (சர்வதேச) படையின் வடமாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி, உணவு உற்பத்தி பற்றி பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். சூசைப்பிள்ளை, சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு. பொனிபாஸ் அடிகளார், கிராம சேவை அலுவலர், திரு. சபாநாராயணன் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்கள். (72)

### தென்மராட்சி
## உ. அ. அதிபர் பிரிவிற்கு 60 மூடை மா ஒதுக்கீடு

(மட்டுவில்)

செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் லொறிகள் மூலம் கொண்டுவரப்பட்ட உணவுப் பொருட்களில் அறுபது மாமூடைகள் தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மாமூடைகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் களஞ்சியத்திற்குக் கொண்டு வரப்பட்டபின் சாவகச்சேரி கொடிகாமம், கைதடிப் பகுதிகளிலுள்ள பிரதான பாண் பேக்கரிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த மாவின் மூலம் தயாரிக்கப்படும் பாண்கள் ஆஸ்பத்திரி. வயோதிபர் இல்லம், அகதிகள் முகாம்கள் ஆகியவற்றுக்கு விநியோகம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரிசி விலை அதிகரிப்பு அகதிகள் தவிப்பு

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்குப் பகுதியில் அரிசி விலை அதிகரித்து வருகின்றது. தற்போது குத்தரிசி கிலோ 22 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. சிவப்புப் பச்சை அரிசியும் இதேவிலைக்கு உயர்ந்துவிட்டது. இதனல் அகதிகளாக இடம்பெயர்ந்து வந்து இடங்களில் தஞ்சம் அடைந்துள்ள மக்கள் உணவு இன்றிப் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (72)

## இப்படியும் நடக்கிறது

ஸ்ரீலங்கா குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின்கிளை (கடவுச் சீட்டு) அலுவலகம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டதும் மகிழ்ச்சி அடையாதவர்கள் இல்லை என்று கூறலாம்:

'பாஸ்போர்ட்டுக்காக கொழும்புக்குச் செல்லத் தேவையில்லை; தரகர் பணமும் இல்லை...'' என்று எண்ணி ஆறுதல் அடைந்தனர்.

ஆனாலும் நினைத்தது நடக்கவில்லை! அதாவது; யாழ். கடவுச்சீட்டு அலுவலகம் கடந்த ஏப்ரல் மாதம் 15ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இவை கொழும்பு சென்று பல மாதங்களாகியும் இங்கிருந்து விண்ணப்பித்த யாருக்குமே 'பாஸ்போர்ட்' வந்துசேரவில்லை! ஆனல் இப்பொழுது ஒரு புதுக்கதை முளைத்திருக்கிறது!

யாழ். அலுவலகம் ஊடாக விண்ணப்பங்களைக் கையளித்த பல விண்ணப்பதாரர்கள் அவர்களது தேசிய அடையாள அட்டையுடன் கொழும்பிலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு நேரில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

இப்படிக் கோரப்பட்ட கடிதங்கள் யாவும் தனிச் சிங்களத்திலேயே உள்ளன.

சந்தேகம் ஒன்று; நேரில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டவர்களில் அதிகமானவர்கள் இளைஞர்களும், யுவதிகளும்தான்.

சந்தேகம் இரண்டு: யாழ்ப்பாணத்தில் ஒரு அலுவலகம் இருககும்போது, அவர்கள்மூலமே விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கும்போது, ஏன் இந்தக் குறுக்குப பாதை'?

சந்தேகம் மூன்று: நேரில் அழைக்கப்பட்டது...... விசாரணைக்கா? அல்லது புலிகள் என்று கருதி 'கதை'யை முடிக்கவா?

இச் சந்தேகங்கள் எல்லாம் விண்ணப்பதாரர்கள் வாயிலிருந்து வந்தவையே. நாம் ஒன்றும் அறியோம் பராபரமே!

'ஊடுருவி'

### நாட்டில்
## சமாதானம் நிலவ வேண்டி பிரார்த்தனை செய்யவேண்டும்

[மட்டுவில்]

"நாட்டில் சமாதானம் அமைதி நிலவ இறைவன் அருள் வேண்டி தமிழினம் ஒன்றுபட்டுப் பிரார்த்தனை செய்யவேண்டும்" என்று ஆத்மஜோதி நா. முத்தையா தெரிவித்தார்.

மட்டுவில். வேம்படி, அம்பலந்துறை, வயலூர் முருகன் ஆலய மண்டலாவிஷேகவிழாவில் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தனதுவேண்டுகோளில் குறிப்பிட்டதாவது:

போராளிகளுக்குப் பல துறைகளிலும், பல கோணங்களிலும் நமது மக்கள் உதவ வேண்டியது கடமை. அத்துடன் நில்லாது அவர்கள் வெற்றியிட்ட தமிழினத்தின் தாய் மண்ணை மீட்கச் சகல அருளாசிகளையும் கொடுக்கும்படி தவருது தமிழினம் தினமும் இறைவனைப் பிரார்த்திக்க நேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (82)

## மட்டுவில் இளைஞர் சுவிஸில் பலி

(நாவற்குழி)

மட்டுவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுவிஸர்லாந்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் பலியானர்.

மட்டுவில் தெற்கு வாசியான எஸ். சாந்தகுமார் (24 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (107)

### தெ. நி. கழகம் ஏற்பாடு
## மட்டுவிலில் வெளிமாவட்ட அகதிகளுக்கான முகாம்!

(மட்டுவில்)

மட்டுவில் மகாவித்தியாலயத்தையும் புதியதொரு வெளிமாவட்ட அகதிமுகாமாக தென்மராட்சி அகதிகள் நிவாரணக்கழகம் பிரகடனம் செய்துள்ளது.

இதைத்தொடர்ந்து வெளிமாவட்டங்களிலிருந்து வந்து சாவகச்சேரியில் தங்கியுள்ள சுமார் 200 அகதிகள் குடும்பங்கள் மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அனுப்பப்படுகிறார்கள்.

மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அனுப்பப்படும் இந்த வெளிமாவட்ட அகதிகள் குடும்பங்களின் நிவாரணங்களை தென்மராட்சி அகதிகள் நிவாரண கழகமே கவனித்துக் கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகிறது. (82)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கச்சியிலும் விமானத்தாக்குதல்

(நாவற்குழி)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் முழுநாளும் இயக்கச்சிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதே வேளை இயக்கச்சிப் பகுதியில் விமானங்களிலிருந்து குண்டுகள் வீசப்பட்டன.

விமானத்திலிருந்து வீசிய குண்டுகளில் ஒன்று வெடிக்காத நிலையில் இயக்கச்சியில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (107)

## சாவகச்சேரியில் ஹெலி தாக்குதல்; பலர் காயம்!

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஹெலிகொப்டர் தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு கிழக்குத் திசையிலிருந்து சாவகச்சேரிப் பக்கமாக வந்த ஹெலிகொப்டர் ஒன்று சாவகச்சேரி சந்தைப் பகுதியை அண்மித்ததும் வீதியில் சென்ற மக்கள் கூட்டத்தை நோக்கி தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

வர்த்தகர்கள் வியாபார நிலையங்களை திறந்தபடி அப்படியே விட்டுவிட்டு சிதறியோடினர். அச்சமயம் படுகாயமடைந்தவர்களில் சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த நகுலேஸ்வரி பசுபதி (வயது 27) என்பவர் மானிப்பாய் யாழ். ஆஸ்பத்திரிப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனையோர் சாவகச்சேரி, மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 15 நிமிடநேரம் சாவகச்சேரி சந்தை, பஸ்நிலையப் பகுதியையே பல தடவை சுற்றி வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்த ஹெலிகொப்டர் மேற்குநோக்கி சென்று மறைந்தது. (56)

### சந்தையில் ஹெலித் தாக்கு ஒருவர் காயம்

(நாவற்குழி)

கொடிகாமத்தில் நடந்த ஹெலித் தாக்குதலில் கொடிகாமம் சந்தையில் வியாபாரம் செய்துகொண்டிருந்த இயற்றாலையைச் சேர்ந்த நல்லையா சின்னப்பு காயமடைந்தார்.

எழுதுமட்டுவாளிலும் ஒருவர் காயமடைந்தார். பளை, கிளாலி ஆகிய பிரதேசங்களிலும் ஹெலி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது. (107)

### வீர மரணம்

(நாவற்குழி)

பரந்தனில் சிறிலங்கா இராணுவத்துடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி சிங்கன் (முல்லைத்தீவு) என்பவர் வீர மரணமடைந்துள்ளார். (107)

### புலிகளின் சினைப்பர் தாக்குதல் இராணுவம் பலி!

(நாவற்குழி)

வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவத்தினரில் ஒருவர் நேற்று முன்தினம் வீதியை கடக்க முயன்றபோது புலிகளின் சினைப்பர் தாக்குதலிற்கு இலக்காகி உயிரிழந்தார், (107)

### சினைப்பர் தாக்குதல் போராளி வீரமரணம்

(நாவற்குழி)

முல்லைத்தீவு இராணுவ முகாமிற்கு அண்மித்திருக்கும் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரணில் சென்றியில் நின்ற போராளி ஒருவர் இராணுவத்தினரின் சினைப்பர் தாக்குதலினால் வீரமரணமானார்.

யசோதரன் (ராஜ்குமார், வல்வெட்டித்துறை) என்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியே இச்சம்பவத்தில் வீர மரணமானவராவார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஜூலை மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

### பரந்தனில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மும்முனைத் தாக்குதலில் அரச படையினர் ஈடுபட்டவண்ணமுள்ளனர்.

பொம்மர், ஹெலி, ஷெல் தாக்குதலின் மூலம் முன்னேற முயன்றுவரும் இராணுவத்தினரை எதிர்கொண்டு விடுதலைப் புலிகளும் கடுமையான தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

புலிகளின் தாக்குதலினால் இராணுவத்தினர் நிலைகுலைந்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாக சுடுவதினால் இப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பூநகரி பாதை ஊடாக பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி இரு தரப்பினருக்குமிடையில் கரடிப்போக்குச் சந்தியில் கடும் சண்டை நடைபெற்றுவருவதாகவும் கூறப்படுகின்றது. (வி-107)

### பலாலியிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்தது. (86)

### 17 பொலிஸார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார். இந்த விபரம் நேற்றைய இலங்கைச் வானொலி செய்தியில் இடம் பெற்றிருந்தது. (வி)

### ஈரோஸ்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பாலகுமார் ஆகியோர் தமக்குக் கூறியதாக, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தமது ஆசனங்களைத் தாம் இன்னும் கைவிடவில்லை என்றும், நாடாளுமன்றத்துக்கு, பின்னர் வருவதாகவும் தம்மிடம் இவர்கள் கூறியுள்ளதாக அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

### ரஞ்சன், ஹேமா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மனோகரி புலேந்திரன் ஆகியோர் இன்று விசேட விமான மூலம் வவுனியா வருகின்றனர்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன வன்னிப்பகுதியில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளை நேரில் கண்டு பாதுகாப்பு நிலை குறித்து ஆலோசனை வழங்க முல்லைத்தீவுக்கும் பயணமாக இருப்பதாக அறியப்படுகிறது.

### பலாலி ஷெல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குப்பிளான் பகுதிகளில் மூவர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் பலத்த சேதமடைந்தன. ஷெல் வாழைத்தோட்டங்களில் விழுந்து வெடித்துச் சிதறியதில் பெருந்தொகையான வாழைகள் துண்டாடப்பட்டன.

குப்பிளான் பகுதியில் இராசையா என்பவரது வீட்டு முற்றத்தில் விழுந்து வெடித்த ஷெல்லினால் வீட்டிற்குள்ளிருந்த இராசையா கேதீஸ்வரன் (வயது-13) என்ற சிறுவன் படுகாயமடைந்தார். வீடும் சேதமடைந்தது.

வசாவிளானில் பதுங்குகுழி வெட்டிக்கொண்டிருந்தவர்களுக்கருகில் விழுந்து வெடித்துச் சிதறிய ஷெல்லினால் நவக்கிரியைச்சேர்ந்த வல்லிபுரம் ஞானகுலசிங்கம் (வயது-30), வல்லிபுரம் யோககுலசிங்கம் (வயது-21) ஆகிய இருசகோதரர் படுகாயமடைந்தனர். (54)

## க. பொ. த. (உயர்) பரீட்சையை ஒத்திவைக்குமாறு கோரி தமிழ் மாணவர் ஊர்வலம்

(வடமராட்சி)

க. பொ. த. (உயர்தர பரீட்சையை ஒத்திவைக்குமாறு கோரி தமிழ்பேசும் மாணவர்களினால் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஊர்வலமொன்று நடத்தப்பட்டது:

ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்ட இவ் ஊர்வலம் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு யாழ். பல்கலைக் கழகம் வரை நடைபெற்றது.

சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் ஊர்வலத்தினர் சென்றார்கள்,

ஊர்வலத்தின் இறுதியில் கைலாசபதி நினைவரங்கில் தமிழ் பேசும் மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். குமாரதாஸ் தலைமையில் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் எஸ். அகல்யா, எஸ். அம்பிகை, செ. ரட்ணலிங்கம், எஸ். சிவகுமாரன், வி. மதிவதன, எஸ். குமாரவேல், எஸ். ஐங்கரநேசன், றிக்சன், எஸ். ரட்ணம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

தமிழ்பேசும் மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ். சுதாகரன் நன்றி வழங்கி உரையாற்றினார். (51)

### முந்திரிக்கொட்டை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யிடுவதில்லை.

குறிப்பாக நேற்று முன்தினம் இரவு ஒலிபரப்பப்பட்ட பி. பி. ஸி. தமிழோசையில், ''வடக்கே யுத்தத்தை மேற்கொண்டு வரும் இலங்கை இராணுவத்தினர், கிளிநொச்சியை தங்களது முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும், ஆனையிறவில் இருந்து புறப்பட்ட இலங்கை இராணுவத்தினர், கிளிநொச்சி முகாமிலுள்ள அரச படையினருடன் சேர்ந்துவிட்டதாகவும், இராணுவ உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்'' என்று செய்தி வெளியிட்டது. இதேசெய்தி நேற்று முன்தினம் 5-30க்கு வெளியான பி.பி.ஸி: ஆங்கிலச் செய்தி அறிக்கையிலும் இடம் பெற்றிருந்தது:

இதேநேரத்தில் நேற்றுக் காலை 6-30க்கு வெளியான இலங்கை வானொலிச் செய்தியில் பரந்தனில் தென்பகுதி இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தொடர்ந்திருப்பதாகவும், ஆனையிறவு முகாமில் இருந்து கிளிநொச்சி நோக்கி படையினர் நகரத் தொடங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை யுத்தச் செய்திகளை பி. பி. ஸி. ஒலிபரப்பும்போது, ஏதோ முந்திக்கொண்டு - முந்திரிக் கொட்டைபோல- தகவல்களைக் கொடுக்காமல், 'நாணயத்தின்' இரு பக்கங்களையும் அவதானித்து செய்திகளைத் தொடர்ந்து வழங்குவது பலனுள்ளதாக இருக்கும் என்று 'தமிழோசை' பிரியர்கள் 'ஈழநாடு'க்கு கருத்துவெளியிட்டுள்ளனர்.

### ஹெலி தாக்குதல்

(நாவற்குழி)

பளையில் ஹெலிகொப்டரில் இருந்து பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டது.

வீதியில் சென்ற உழவு யந்திரம் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில்உழவுயந்திரத்தை செலுத்தி வந்த சாரதி படுகாயமடைந்தார்.

குடல் வெளியேறியநிலையில் காணப்பட்ட சாரதி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இத் தாக்குதலின் போது இரு வர்த்தக நிறுவனங்களும் சேதமடைந்தன: (107)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம்:
18-09-1951



அஸ்தமனம்:
27-07-1983

### பண்டிதர் ஆ. சேயோன்
(ஆங்கில ஆசிரியர்)

செந்தமிழர் வாழ்வுக்காய் உன்னை ஈந்தாய்
சிறப்புடனே பண்டிதனுய்ப் பட்டம் பெற்றாய்
சிந்தையிலும் பிறர் தீமை நினையாச் செல்வா
சீர்மிகுந்த ஒழுக்கத்தில் நிலையாய் நின்றீர்
தந்தைவழித் தந்தையராய் வாழ்ந்த நாட்டில்
தமிழீழம் பெற்றிடவே முனைந்து நின்றீர்
அந்தகனுய் அன்றொருவன் இல்லம் வந்து
அழைத்துன்னைச் சென்றானே என்ன செய்வோம்

அன்னையிலே பாசமது மிகவும் கொண்டாய்
அவரை விட்டுப் பிரிவதென்றால் இயலாதென்றாய்
உன்னை அந்தப் பாதகராம் பட்டாளத்தார்
உடனழைத்துச் சென்றந்தச் சிறையில் வைத்தார்
அந்நியர்கள் உன்னை அந்தச் சிறையில் வைத்து
அடித்துத்தான் கொன்றாரே அலறுகின்றோம்
உன்னினைவால் எப்போதும் வாடும் அன்னை
உளமதனை தேற்றிடவே யாரே வல்லார்
உன்னுன்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்
உத்தமனே உன்நினைவை மறக்க மாட்டோம்.

என்றும் உன் நினைவால் வாடும்
அம்மாவும், தம்பியும், அக்காவும்.

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்.
[சி 820]

### சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்
## புதிய உணவு பங்கீட்டு அட்டைகள் விநியோகம்

(மட்டுவில்)

சாவகச்சேரியில் பலநோக்கு கூட்டுறவு சங்கம் தனது கிளைச்சங்கள் மூலம் புதிய உணவுப் பங்கீட்டு அட்டைகளை விநியோகம் செய்வதில் சுறுசுறுப்பாகவுள்ளது.

பழைய பங்கீட்டு அட்டைகளை கொடுத்து இப்பங்கீட்டு அட்டைகளை பாவனையாளர்கள் பெற்றுவருகிறார்கள்.

பழைய பங்கீட்டு அட்டைகள் இல்லாத பாவனையாளர் தமது கிராம சேவை அலுவலர்களுக்கு மனுச்செய்து அவர்களின் சிபார்சின் மூலம் புதிய பங்கீட்டு அட்டையை பெற்றுக் கொள்கிறார்கள். (82)

### குழந்தைகள் பராமரிப்பு நிலையம் மீது
## ஹெலி தாக்குதல்!

(மட்டுவில்)

'ஹெலி' தாக்குதலைத் தொடர்ந்து நுணுவில் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தைச் சேர்ந்த குழந்தைகள் மயிரிழையில் உயிர்தப்பினர்.

ஹெலி தாக்குதலால் துப்பாக்கிச் சன்னங்கள் [illegible] நிலையத்தின் கூரை ஓட்டை உடைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தன.

அங்கு கடமையில் இருந்த பராமரிப்புப் பெண்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு தண்ணீர்த் தொட்டிக்குடியில் பதுங்கிக் கொண்டனர். [illegible] சன்னங்கள் அந்த விடுதிக்குள் விழுந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org